# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.


3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996


**Official Property Record**





## வடுகந்தாங்கல் ஊராட்சி தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல் முறைகள்:

## முன்னிலை: திரு: தே.கோபி

ந.க. எண்: 1 /2017-18 நாள்:24.4.2018

பொருள்:அனுமதியற்ற மனைபிரிப்பு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் வடுகந்தாங்கல் விக்ரமாசி கிராமம் சர்வே எண் 202/1A1ல் 5.32 ஏக்கர்( 21528.60 ச.மீ (அ) 231739.20 சதுர அடி ) மனைப்பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறை படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் அளித்து உத்திரவிட்டது –சார்பு.

பார்வை:1).மனுதார் திரு.N.J.பால் மற்றும் இருவர் NO:04, கிளோரி காட்டேஜ் 5வதுபி குறுக்கு தெரு எம்.வி. நகர் பெங்களூர் 560016 அவர்களின் விண்ணப்பம் நாள்:

2).நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) வேலூர் மண்டலம் அவர்களின் ந.க.எண் 1855/2017/வேம3,நாள்:23.1.2018

3).அரசாணை ( நிலை ) எண் 255 ஊரக வளர்ச்சி (சி.2) துறை நாள் 18.8.1997

4).அரசாணை எண்:78 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சிதுறை ந.வ 4(3) நாள்:4.5.2017

5).அரசாணை எண்:172 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சிதுறை ந.வ 4(3) நாள்:13.10.2017

6).தனி அலுவலர் வடுகந்தாங்கல் பெயரில் எழுதி ஒப்படைத்த நில ஒப்படைப்பு ஆவண எண்:246/2018 நாள்:9.2.2018 கீ.வ.குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தெருகள், பொது இடங்களுக்கு (பூங்கா) ஒதுக்கிய தானபத்திரம்.

7).ஊராட்சி தீர்மான எண் :6 நாள்: 24.4.2018

உத்திரவு:

பார்வை 1ல் காணும் விண்ணப்பத்தில் பெங்களூர் திரு.N.J.பால் மற்றும் இருவர் NO:04, கிளோரி காட்டேஜ் 5வதுபி குறுக்கு தெரு எம்.வி. நகர் பெங்களூர் 560016 என்பவர் வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் விக்ரமாசி கிராமம் சர்வே எண் 202/1A1ல் 5.32 ஏக்கர் ( 21528.60 ச.மீ (அ) 231739.20 சதுர அடி ) நிலப்பரப்பில் வரைபடத்தில் கண்டுள்ளபடி 123 மனைபிரிப்புகள் செய்து அதில் மனை எண் 5 ( 1246.00 சதுர அடி ) ஒன்று மட்டும் விற்றுவிட்டார் மீதம் உள்ள 122 மனைகள் விற்பனை செய்யப்படவில்லை. மேற்படி மனைகளை வரைமுறைபடுத்த கோரி விண்ணப்பித்துள்ளார்.

பார்வை 3,4,5ல் கண்ட அரசாணைகளின்படியும் பார்வை 2ல் கண்ட நகர ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) வேலூர் மண்டலம் வேலூர் அவர்கள் அனுமதியற்ற குடிமிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிப்பிற்கு வடுகந்தாங்கல் ஊராட்சி தனி அலுவலர் ஊராட்சி மூலம் ஒப்புதல் அளிக்கலாம் என தெரிவித்துள்ளதன் அடிப்படைமிலும் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டது.

வரைபடத்தில் கண்டுள்ளபடி பொது இடத்திற்கான அளவுகள்:

தற்போது அரசாணைப்படியும் நிபந்தனைகளுக்குட்பட்டு குடிமிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி விற்கப்படாத மனைகளுக்குண்டான பரப்பிற்கு 10.30% நிலத்தை பொது உபயோகத்திற்காக 16095.00 ச.அடி

| | |
|---|---|
| பூங்கா-1 (மனை எண்:1-4) | 5300.00 ச.அடி |
| பூங்கா-2 (மனை எண்:8) | 1243.00 ச.அடி |
| பூங்கா-3 (மனை எண்:11) | 1424.00 ச.அடி |
| பூங்கா-4 (மனை எண்:22,(ம) 33) | 2000.00 ச.அடி |
| பூங்கா-5 (மனை எண்:40,(ம) 51) | 2000.00 ச.அடி |
| பூங்கா-6 (மனை எண்:105,(ம)106) | 1554.00 ச.அடி |
| பூங்கா-7 (மனை எண்:108) | 1203.00 ச.அடி |
| பூங்கா-8 (மனை எண்:113) | 1370.00 ச.அடி |

---

மொத்தம்: 16095 ச.அடி 10.30% 14மனைகள் ஒதுக்கீடு செய்யும்,

---

வரைபடத்தில் கண்டுள்ளபடி தெரு பொது வழிக்கான அளவுகள்:

1). 1வது மெயின் பிரதான தெருவின் மொத்த அளவுகள் 12600 சதுரடி,
2). 2வது மெயின் பிரதான தெருவின் மொத்த அளவுகள் 18625 சதுரடி,
3). முதலாவது குறுக்கு தெருவின் மொத்த அளவுகள் 3300 சதுரடி
4). இரண்டாவது குறுக்கு தெருவின் மொத்த அளவுகள் 3300 சதுரடி
5). முன்றாவது குறுக்கு தெருவின் மொத்த அளவுகள் 3300 சதுரடி,
6). நான்காவது குறுக்கு தெருவின் மொத்த அளவுகள் 3300 சதுரடி
7). ஐந்தாவது குறுக்கு தெருவின் மொத்த அளவுகள் 6435 சதுரடி
8). ஆறாவது குறுக்கு தெருவின் மொத்த அளவுகள் 5940 சதுரடி
9). ஏழாவது குறுக்கு தெருவின் மொத்த அளவுகள் 5940 சதுரடி
10). எட்டாவது தெருவின் மொத்த அளவுகள் 5533 சதுரடி

--------------------------------

மொத்தம்:68273 ச.அடி

--------------------------------

ஆக இதன் பரப்பளவு 68273 ச.அடிகள், தெரு வழி இடத்தையும், பொது இடம் 16095 சதுரடிகள் ஆக 84368 சதுரடிகள் வடுகந்தாங்கல் ஊராட்சி தனி அலுவலர் பெயரில் தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி கீ.வ.குப்பம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 9.2.2018 ல் பதிவு செய்து பத்திரம் ஆவண எண்:-246/2018 அசல் பத்திரம் வழங்கியுள்ளார்.

மேலும் Online Registration NO DTCP / L/0032224/2017 நாள்: 28.11.2017-ன் படி விற்கப்பட்ட (ம) விற்கப்படாத 123 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ 500.00 வீதம் 123x500=ரூ.61500.00/- Onlineல் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் விற்கப்படாத மனைகளை வரன் முறைபடுத்துலுக்கான கட்டணம் 1ச.மீ க்கு ரூ.30 வீதம் ரூ.390660.00/-யை நாள்:24.4.2018ல் அரசு தலைப்பில் செலுத்திய சலான் நகல் மற்றும் விற்கப்படாத மனை வரன் முறைபடுத்துதலுக்கான வளர்ச்சி கட்டணம் 1ச.மீ க்கு ரூ.25 வீதம் ரூ.325550.00/-யை வடுகந்தாங்கல் ஊராட்சி நிதி கணக்கு எண்:1 நாள்:24.4.2018ல் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே அரசு ஆணைகள்படியும் நகர ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) வேலூர் அவர்களின் ஒப்புதல் (ம) நிபந்தனைகள்படியும், வடுகந்தாங்கல் ஊராட்சி கிராம சர்வே எண் 202/1A1ல் 5.32 ஏக்கர் (21528.60 ச.மீ (அ) 231739.20 சதுர அடிகள) மனைப்பரப்பில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன் முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிப்பிற்கு ம.வ./ந.ஊ.து.இ(வே.ம) வரன்முறைபடுத்துதல் எண்:60(R)/2018நாள்: 23.1.2018 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு வரன்முறைபடுத்தி ஒப்புதல் அளித்ததை ஏற்றும் ஊராட்சி தீர்மான எண்:6/நாள்:24.4.2018 படி விற்கப்படாத 108 மனைகள் அடங்கிய மனைப்பிரிவினை அங்கீகரித்து உத்திரவிடப்படுகிறது.

இனைப்பு:

வரைபடம்-1

தனி அலுவலர் / 24.4.18
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.)
வடுகந்தாங்கல் ஊராட்சி
கீ.வ. குப்பம் ஊராட்சி ஒன்றியம்

24.4.18

பெறுநர்,
திரு.N.J.பால் மற்றும் இருவர்,
NO: 04 கிளோரி காட்டேஜ்,
5வது பி குறுக்கு தெரு எம்.வி. நகர்,
பெங்களூர் 560016.

நகல்:

1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
   வேலூர் மண்டலம்,நெ. 239, பேஸ் -2 சத்துவாச்சாரி
2) சார்பதிவாளர்,
   கீ.வ.குப்பம் சார்பதிவாளர் அலுவலகம்,

## /பதிவுத்துறை/

**அனுப்புநர்**
திரு.இரா.இரவீந்திரநாத், M.Sc., B.L.,
மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்)
(உபதுத நிலை)
வேலூர்-1

**பெறுநர்**
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கீ.வ.குப்பம்

**ப.மு.எண்.3825/ஆ2/2018, நாள் : 14.05.2018**

**அய்யா,**

**பொருள்:** வரன்முறை – அனுமதியற்ற மனைப்பிரிவு வரன் முறைபடுத்துதல் திட்டம்-2017, வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம்- வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம்- K.V.குப்பம் சப்டி- விக்கிரமாசி கிராமம் சர்வே எண். 202/1எ1-ல் ஏக்கர் 5.32 பரப்பில் அமையும் அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - ஆவணபதிவு மேற்கொள்ள அனுமதி அளித்தல்- தொடர்பாக

**பார்வை:** N.J.பால் எண்.4 கிரேஸ் காட்டேஜ், MV.நகர் ராமமூர்த்தி நகர் பெங்களூரு-560016 நாள்:09.05.2018 (உடன் பெறப்பட்ட உள்ளூர் திட்டக் குழுமம் ம.வ/வே.உ.தி.கு வரன்முறைப்படுத்துதல் எண்:6(R)/2017-ன் ந.க.எண்.864/2017/ வே.உ.தி.கு நாள்.08.12.2017-ன் கடித நகல்)

><><><><

பொருளில் காணும் இனம் தொடர்பாக, பார்வை காணும் காட்பாடி சார்பதிவாளர் கடிதத்துடன் பெறப்பட்ட நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) வேலூர்-9, வேலூர் உள்ளூர் திட்டக்குழுமம் கூராய்வு கட்டணம், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆணையின்படி, பொருளில் குறிப்பிடப்பட்ட சர்வே எண்களில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையில் கண்டுள்ளபடி செயல்படவும், வரன்முறைசெய்யப்பட்ட வரைபடம், ஆணைநகலை கோர்வை செய்து கொள்ளவும், அதன் அடிப்படையில் ஆவணபதிவு மேற்கொள்ள அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்)
(உபதுத நிலை) வேலூர்-1.



# our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate